**மாத்தளை மாவட்டத்தின் 23 கமநல சேவை செயற் குழுக்கள்- 2023**

---

**1. கணக்காய்வு அபிப்பிராயம்**

**1.1** மாத்தளை மாவட்டத்தின் 23 கமநல சேவை செயற்குழுக்களின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** மாத்தளை மாவட்டத்தின் 23 கமநல சேவை செயற்குழுக்கள் தொடர்பாக விநியோகிக்கப்பட்ட 23 கணக்காய்வு அறிகைகளில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளியிடப்பட்டுள்ளதுடன், முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான காரணமாகியிருந்த பொருண்மையான தவறுகள் கீழ் காண்பிக்கப்படகின்றன.

**1.3 நிதிக்கூற்றுக்கள்.**

**1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் உள்ளடங்களாக கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்காமைகள்.**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் அட்டுறு அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்க வேண்டிய போதும், 08 கமநல சேவை செயற்குழுகளின் கூட்டுத்தொகை ரூபா 2,250,518 ஆன ஏக்கர் வரி வருமானம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் கணக்கு அறிக்கைகளை தயாரிக்கும் போது ஏக்கர் வரி வருமானத்தை அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதென. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கணக்கு வைக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 09 இன் 38 ஆம் பந்தியின் பிரகாரம் காலாவதியாகும் இருப்புக்களுக்கு உரித்தாக தேறிய நிகர பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் ஹெட்டிபொல கமநல சேவைகள் செயற்குழுவின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் காலாவதியான ரூபா 529,942 ஆன விவசாய இரசாயன இருப்பொன்று இறுதி இருப்பு மீதியில் கொள்விலையை அடிப்படையாக கொண்டு காண்பிக்கப்பட்டிருந்தன. | எதிர்வரும் காலங்களில் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அழிவடைந்த மற்றும் காலாவதியான இருப்புக்களில் தேறிய நிகர பெறுமதி கணக்குகளில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 04 கமநல சேவைகள் செயற்குழுக்களால் மீளளிக்கப்பட வேண்டிய ரூபா 662,454 ஆன பெறுவனவுகள் மீளாய்வாண்டின் வருமானமாக மற்றும் மீளல் நிரப்பக்கூடிய ரூபா் 125,050 ஆன ஆன கொடுப்பனவு மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆண்டில் செலவிடப்பட்ட செலவினமாக இருப்பதால் கணக்கீடு செய்ததாகவும் எதிர்காலத்தில் சரியாக சீராக்கம் செய்வதாகவும் | செயற்குழுவின் வருமானம் மற்றும் செலவீனம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | மானிய உர விற்பனை மூலம் செயற்குழுவிற்கு இலாபம் ஒன்றோ அல்லது நட்டம் ஒன்றோ இடம் பெறாத போதும் கலேவல கமநல சேவைகள் செயற்குழு மானிய உர விற்பனை கணக்கை தயாரித்து அதில் கொள்வனவு பெறுமதியை தவறாக பதிவு செய்த காரணத்தினால் வியாபாரக் கணக்கில் ரூபா 229,329 ஆன மொத்த நட்டமொன்று இனங் கண்டு இருந்ததால் செயற்குழுவின் மிகை அப் பெருமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டு இருந்தது. | சீராக்குவதற்கு நடவடிக்கை ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக | கணக்கீட்டு வழுக்கள் சரியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | தம்புள்ள கமல சேவை செயற்குழுவினால் மீளாய்வாண்டில் உர வியாபார கணக்கை தயாரிக்கும் போது எம்.ஒ.பி மற்றும் யூரியா உர வகைகளில் ரூபா 6,000,000 கொள்வனவுப் பெறுமதி மற்றும் ரூபா 709,200 ஆன ஆரம்ப இருப்பு பெறுமதி விற்பனை கிரயத்தில் உள்ளடக்காமையால் மொத்த இலாபம் மற்றும் மிகை ரூபா 6,709,200 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | எம்.ஓ.பீ மற்றும் யூரியா உரங்களின் கொள்வனவு பெறுமதி வியாபார கணக்கிற்கு தவறுதலாக கொண்டு வரப்படாமல் இருந்ததாகவும் 2024 கணக்கு அறிக்கைகளை தயாரிக்கும் போது இடம்பெற்றுள்ள தவறுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டில் இறுதி திகதியில் உள்ளவாறு 03 கமநல சேவைகள் செயற்குழுக்களின் கணக்காய்வு கட்டணங்கள் ரூபா 62,300 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டமை காரணமாக பொறுப்புக்கள் திருமணத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு சீராக்கி காண்பிப்பதற்கும் கொடுப்பனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பதாக | செலுத்த வேண்டிய மீதிகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். - |
| (உ) | 2018, 2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்குரிய கமநல வங்கியால் செலுத்தப்பட்ட ரூபா 263,440 ஆன | திரண்ட நிதியத்திற்கு சீராக்கு கணக்கை சரி செய்வதற்கு | முறையாக சீராக்கங்களை மேற்கொண்டு சரியாக்குவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | பங்கிலாப வருமானம் பெறவேண்டிய பங்கிலாபக் கணத்திற்கு சீராக்காமல் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டு இருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முறையாக | நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஊ) | லக்கல பள்ளேகம கமநல சேவைகள் செயற்குழுவிற்கு கிடைத்திருந்த 13 நிலையான சொத்துகளுக்குரிய மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வு மற்றும் முன்னைய் ஆண்டிற்குரிய மொத்தம் ரூபா 176,515 ஆன பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டின் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதெனை. | சொத்துக்களுக்கு உரிய சரியான பெறுமானத் தேய்வு பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | 03 கமநல சேவைகள் செயற்குழுக்கள் மூலம் முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 320,451 ஆன செலவினம் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கீட்டு குறைபாட்டை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஏ) | 06 கமநல சேவைகள் செயற்குழுக்களுக்குரிய முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,507,633 ஆன கணக்கீட்டு குறைபாடுகள் மீளாய்வாண்டிலும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | மேற்படி |
| (ஐ) | 06 கமநல சேவைகள் செயற்குழுக்கள் மூலம் GEO GOVIYA நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 18859 வயல் காணித் துண்டுகளை அளப்பதற்குரிய செயற்குழு வருமானமான ரூபா 92,015 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வருமானத்தை சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஒ) | 12 கமநல சேவைகள் செயற்குழுக்களின் கமநல வங்கி மென்பொருள் மற்றும் மென்பொருளுக்குரிய பாகங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,491,211 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் இறுதி மாதம் மீளாய்வாண்டு முடிவடைந்து இறுதியில் 03 மாதங்கள் முதல் 05 மாதங்கள் காலம் ஒன்று கடந்திருந்த போதும் அச்சொத்துக்கள் செயற குழுவிற்கு கிடைக்காத இருக்கையில் நடைமுறை அல்லாச் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளரின் ஆலோசனையின் பிரகாரம் கொடுப்பனவு செய்ததாகவும் குறித்த உபபகாங்கள் கிடைக்கப்பெற்று வருவதாகவும் | சொத்துக்கள் முறையாக இனம் கண்டு கணக்கீடு செய்யப்படፐ வேண்டும் |
| (ஓ) | 2023 நவம்பர் 13 ஆம் திகதிய 5/3/5/1/23 இலக்க கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் செயற்குழு கட்டிடங்களின் | அடுத்த ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கீட்டு குறைபாடுகள் சரி செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீட்டுப் பெறுமதி குறிப்பிடப்பட்டிருந்த போதும் 05 கமநல சேவைகள் செயற்குழுக்களின் மூலம் கட்டிடங்களை மதிப்பீட்டு பெறுமதியான ரூபா 3,565,000 மற்றும் அதற்கு உரிய ஆண்டின் பெறுமானத் தேய்வு ரூபா 1,651,643 தொகையை கணக்கீடு செய்யப்படாமல் இருந்ததுடன் லக்கல பள்ளேகம தன்ன கமநல சேவை நிலையங்களில் மூலம் மதிப்பிடப்பட்ட பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் அதற்குரிய ஆண்டின் பெறுமானத் தேய்வான ரூபா 515,000 தொகை கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை | | |
| (ஔ) | 04 கமநல சேவைகள் செயற்குழுக்கள் மூலம் மீளாய்வாண்டிற்குரிய வருமானம் ரூபா 44,831 ஆன நடைமுறை சொத்துக்கள் ரூபா 82,670 தொகை மற்றும் ரூபா 19,273 ஆன நடைமுறை பொறுப்புக்கள் கூடுதலாக காண்பிக்கப்பட்டு இருந்தன. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | மேற்படி |
| (க) | 04 கமநல சேவைகள் செயற்குழுக்கள் மூலம் மீளாய்வாண்டிற்குரிய மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 1,693,430 ஆன பங்கிலாபம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | மேற்படி |
| (கா) | 13 கமநல சேவைகள் செயற்குழுக்களுக்குரிய ரூபா 299,427 ஆன வருமானம் ரூபா 697,515 ஆன நடைமுறைப் பொறுப்புகள் மற்றும் ரூபா 440,699 ஆன நடைமுறை சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | மேற்படி |

### 1.3.3 இணங்காத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 10 கமநல சேவை செயற் குழுக்களின் 4 வருமான விடயங்களில், 7 சொத்து விடயங்களில், பொறுப்பு விடயமொன்றில் மற்றும் செலவின விடயம் ஒன்றிற்குரியதாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகள், நேரொத்த அறிக்கையுடன் இணக்கம் செய்கையில் கூட்டுத் தொகை ரூபா 1,206,348 ஆன இணங்கமின்மை நிலவியது. | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகளை சரிசெய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 09 கமநல சேவைகள் செயற்குழுக்களுக்கு உரிய நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் காண்பிக்கப்பட்டுள்ள கமநல வங்கி அறிக்கை வருடாந்த பெற வேண்டிய பங்கிலாப பெறுமதி கமநல சேவை வங்கி நிதிக் கூற்றுக்களுடன் ஒப்பிடும் போது மொத்தம் ரூபா 10,924,004 ஆன இணக்கமின்மை காணப்பட்டது. | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |
| (இ) | தம்புள்ள கமநல சேவைகள் செயற்குழுவின் உர பொருண்மை இருப்புக் கணக்கின் பிரகாரம் மீளாய்வாண்டின் விற்பனை அளவு மற்றும் அலகு கொள்வனவு விலை மற்றும் விற்பனை விலைக்கு இடையே ஒப்பிடும் போது உர விற்பனை ஊடாக ரூபா 1,384,661 ஆன மொத்த இலாபம் ஒன்று கிடைக்க வேண்டிய போதிலும் உர வியாபார கணக்கில் ரூபா 6,727,946 ஆன மொத்த இலாபம் ஒன்று காண்பிக்கப்பட்டிருந்ததால் ரூபா 5,343,285 ஆன இணக்கமின்மை காணப்பட்டது. | எதிர்காலத்தில் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | இணக்கமின்மை இனம் காணப்பட்டு சீராக்கும் செய்யப்பட வேண்டும் - |

**1.3.4 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வாலவெல கமநல சேவை செயற்குழுவால் வருடக் கணக்காக முன் கொண்டு வரப்பட்டு வரும் மொத்தம் 76,235 ஆன செலவு மீதி ஒன்றும் ரூபா 33,760 ஆன வரவு மீதியொன்றும் மீளாய்வாண்டின் போது திரட்டு நிதியத்திற்கு சீராக்கப்பட்டு பதிவழிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதற்காக எழுத்து மூலம் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மீண்டும் அமமீதிகளுக்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டு அனுமதியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக | முறையான அங்கீகாரத்துடன் மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | தேவஹுவ கமநல வங்கியின் 05 கட்டுப்பாட்டு கணக்குகளுக்குரிய ஆண்டின் போது செலவு வைப்பதற்கு முடியாமல் போன ரூபா 64,581 ஆன மீதி ஒன்று முறையான அங்கீகாரம் இன்றி திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டு இணக்கம் செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டுக்காக திரண்ட நிதியத்திற்கு மேற் கொள்ளப்படும் வரவு வைத்தலுக்காக பிரதி ஆணையாளரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக | முறையான அங்கீகாரத்துடன் மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும் |

### 1.3.5 கணக்காய்விற்கு எழுத்து மூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 12 கமநல சேவை செயற் குழுக்களின் நிதிக் கூற்றுக்களில் காண்பித்துள்ள கூட்டுத் தொகை ரூபா 1,750,297 ஆன 08 சொத்து விடயங்களில், கூட்டுத்தொகை ரூபா 1,339,456 ஆன 05 பொறுப்பு விடயங்களில் மற்றும் ரூபா 1,819,801 தொகையான உரித்து விடயமொன்றிற்குரிய அட்டவணைகள், மீதி உறுதிப்படுத்தும் பதிவேடுகள் மற்றும் கோவைகள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. | முன்னரிலிருந்து கணக்கு அறிக்கைகளில் முன்கொண்டு வரப்படும் மீதியாக இருப்பதால் விபரங்களை கண்டறிய முடியாதுள்ளதென, சேமிப்புக் கணக்குகளிற்காக, பாஸ் புத்தகங்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதென மற்றும் எதிர்காலத்தில் தீர்த்துக் கொள்ள குறித்துக் கொண்டதென. | கணக்கு மீதிகள் தொடர்பான அனைத்து உறுதிப் பாடுகளையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

### 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2000 இன் 46 இலக்க கமநல அபிவிருத்தி சட்டம் | | | |
| i. | 53 (4) (அ) பிரிவு | 14 கமநல செயற் குழுக்களில் 217 பிரிவுகளில் வயற்காணி பெயர் பட்டியலை கமநல அபிவிருத்தி ஆணையாளர் பரீட்சித்து உறுதிப்படுத்தி இருக்கவில்லை. | ஆவணங்களில் குறைபாடுகளை சரிசெய்து கொண்டு போவதுடன் அக் குறைபாடுகளை சரி செய்து கையொப்பம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| ii. | 51(3) (i) பிரிவு | லக்கல கமநல சேவைகள் செயற்குழு கமநல அபிவிருத்தி அதிகாரப் பிரதேசத்தின் அனைத்து விவசாய அமைப்புகளில் ஒரு முகவருடன் கூடியதாக தயார் செய்யப்படாதிருந்ததுடன் | 18 விவசாய அமைப்புளுக்கு இடையே 12 அமைப்புக்கள் செயற்படாதிருப்பதால் இயங்கக் கூடிய 06 விவசாய அமைப்புக்களின் 05 பேர் | னைத்து கமநல அமைப்புக்களையும் செயற்பாட்டு மட்டத்தில் பராமரித்து பங்குபெயற் செய்வதற்கு நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செயற்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ள 18 விவசாய அமைப்புளுக்கு இடையே 05 அமைப்புக்களின் 05 உத்தியோகத்தர்களுடன் மாத்திரம் கூடியதாக இருந்தது. | சமூகமளித்திருந்தனர். | எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| i. | நி. பி. 315 | 07 செயற் குழுக்கள் மூலம் வழியில் காசு தொடர்பான காப்புறுதியொன்றை பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் வழியில் காசு காப்புறுதி காப்புறுதியொன்றை பெற்றுக்கொள்ள தேவையான நடவடிக்கை மேற்கொள்வதென. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| ii. | நிதிப் பிரமாணம் 396(ஈ) | தம்புள்ள மற்றும் ஹெட்டிபொல கமநல சேவைகள் குழுக்களால் வழங்கப் பட்டிருந்த போதும் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத காலாவதியான ரூபா 226,248 பெறுமதியான 4 காசோலைகள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |
| (இ) | 2009 ஏப்ரல் 16 திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | 10 கமநல சேவை செயற்குழுக்களில் 08 முதல் 12 மாதங்கள் வரையான காலப்பகுதியில் அலுவலர்களின் வருகை மற்றும் வெளிச் செல்லலை குறிப்பிட கைவிரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்தயிருக்காததுடன் 11 கமநல சேவை செயற்குழுக்களில் விரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்திய போதும் அச்சிட்ட பிரதிகளை பெற்று வரவு, வெளிச் | கைவிரல் அடையாள இயந்திரம் முறையாக செயற்பாட்டில் இல்லாமையால் திருத்தத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது தொடர்பாக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செல்லலை மேற்பார்வை செய்திருக்கவில்லை | | |
| (ஈ) | கமநல சேவை ஆணையாளரின் சுற்றறிக்கை | | | |
| i. | 1981 இன் ஒக்தோபர் 16 ஆந் திகதிய 107 ஆம் இலக்க கமநல சேவைகள் ஆணையாளரின் சுற்றறிக்கையின் 30(4) ஆம் பந்தி | இயந்திரத்தின் கிரயத்தின் அடிப்படையில் தேய்மானம் கணிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும் பலாபத்வெல மற்றும் பண்டாரபொல கமநல சேவைகள் செயற் குழுக்களினால் இயந்திரங்கள் மற்றும் தம்புள கமநல சேவைகள் செயற்குழுவின் கட்டிடங்கள் குறைந்து செல்லும் வீதத்தினைப் பயன்படுத்தியிருந்தன. | கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பயிற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரகாரம் அனைத்துச் சொத்துக்ளும் குறைந்த செல்லும் மீதி முறைமையிவ் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டுள்ளதாக | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும் |
| ii. | 1984 ஆகஸ்ட் 27 ஆந் திகதிய 268 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஹந்துன்கமுவ கமநல சேவைகள் செயற் குழுவினால் 2020 ஆம் ஆண்டு முதல் இருந்து வரும் ரூபா 44,887 ஆன நிலுவை ஏக்கர் வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| iii | 1986 ஒக்தோபர் 21 திகதிய 264 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தி | 04 கமநல சேவை செயற்குழுக்கள் மூலம் மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 414,000 ஆன அறை வாடகை அறவிடப்பட்டு இருக்கவில்லை. | வாடகையை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக. | - மேற்படி - |
| iv. | 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 15(3) ஆம் பிரிவு மற்றும் 1988 மே 27 திகதிய 322 ஆம் இலக்க சுற்றிக்கையின் 12 (1) பந்தி | 03 கமநல சேவை செயற்குழுக்களிற்கு உரியதாக 02 ஆண்டு முதல் 25 ஆண்டுகள் வரையிலான காலமாக நிலவி வரும் ரூபா 243,963 ஆன காணி உரித்து பிரவேணி பணத்தை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதெனவும் கமநல அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுப்பதெனவும் பங்கு விளைவு விவசாயிகள் மற்றும் காணி உரிமையாளர்களிற்கு இடையில் பிரச்சினைகளின் மீது நீதிமன்றத்தின் வழக்கு தீர்ப்புகளின் | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மீது தேவையான நடவடிக்கை எடுப்பதென. | |
| v. | 2000 யூன் 06 ஆம் திகதிய 518/2000 ஆம் இலக்க இலக்க கமநல ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி மற்றும் 2012 பெப்ரவரி 29 ஆந் திகதிய 04/2012 ஆம் இலக்க கமநல வங்கி (முன்னோடி) செயற்திட்ட சுற்றறிக்கையின் 5.6(i) ஆம் பந்தி | 2023 ஆம் ஆண்டிற்குரிய 23 கமநல வங்கிகளின் நிதிக் கூற்றுக்கள் கமநல சேவைகளின் நிதிக் கூற்றுக்களுடன் ஒன்றிணைக்கப்பட்டிருக்க வில்லை | திணைக்களத்தின் ஆலோசனைகளின் பிரகாரம் கணக்கறிக்கை தயாரிக்கப் பட்டுள்ளதாக | - மேற்படி - |
| vi. | 2012 பெப்ரவரி 29 ஆந் திகதிய 04/2012 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் கமநல வங்கி (முன்னோடி) சுற்றறிக்கையின் 3.4.2(ii) ஆம் பந்தி | பயிர்ச் செய்கை கடன் வழங்கப்பட்டு 06 மாதங்களுக்குள் அனைத்து கடன் தொகையும் வட்டியுடன் மீண்டும் அறவீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 16 கமநல சேவைகள் செயற் குழுக்கள் மூலம் 548 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 22,060,067 கூட்டுப்பெறுமதியான பயர்ச்செய்கை கடன் உரிய காலப்பகுதியில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | தற்போது நியாயசபைக்கு அனுப்பிவைக்கப்பட் டுள்ளதாகவும் எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளதாக | கடன் விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| vii | 2012 பெப்ரவரி 29 ஆந் திகதிய 04/2012 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 3.8 ஆம் பந்தி | குறுங்காலம் அல்லாத வேறு பயிற்சி செயற்திட்டங்கள் மற்றும் அதனுடன் அன்பமித்த உற்பத்திகளை அதிகரிப்பதற்கும் அறுவடைக்கு பின்னரான தொழில் நுட்பத்தை மேம்படுத்துவதற்கும் | 2012/4 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் எதிர்காலத்தில் கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழங்கப்பட்ட கடன், செயற்திட்ட கடனின் கீழ் எடுக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதும் யட்டவத்த மற்றும் வேரகம கமநல சேவைகள் செயற் குழுக்களினால் அதற்கு இணங்காத வகையில் சில்லறை வியாபாரம், தச்சு வேலை மற்றும் இனிப்பு பண்ட உற்பத்தி போன்ற வேறு செயற்பாடுகளுக்காக 34 பேருக்கு ரூபா 759,194 ஆன கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. | கொண்டுள்ளதாக | |
| viii | 2012 பெப்ரவரி 29 ஆந் திகதிய 04/2012 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 4.23.1 மற்றும் 4.23.2 ஆம் பந்திகள் | அறிமுகப்படுத்தப்பட்டுள்ள படிவங்களின் பிரகாரம் 1390 பங்காளர்களின் மற்றும் 1336 வைப்பாளர்களின் தகவல்கள் பங்குகள் மற்றும் வைப்பு பேரேட்டில் பள்ளேபொல வங்கியால் நாளது வரையாக்கப்பட்டிருக்கவி ல்லை. அவ்வாறே 93 நுண் நிதி வைப்பாளர்களின் மொத்தம் ரூபா 1,025,207 ஆன வைப்புகளை பேணி சென்று இருந்த போதும் அம்மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக நுண் நிதி வைப்பாளர்களின் பேரேடும் பேணப்பட்டு இருக்கவில்லை. | கமநல வங்கியின் கணக்குகளுக்காக பேரேட்டில் பதிவு செய்வதற்கு முறையாக ஆரம்பத்தில் இருந்து வைக்கப்படாமல் இருந்ததுடன் தற்போது மேற்படி இக்கணக்கு களுக்காக உப பேரேடு எழுதுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள தாகவும் தற்போது பேரேட்டை நாளதுவரையாக்குவ தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் | பதிவேடுகள் முறையாக நாளதுவரையாக் கப்பட்டு பேணிச் செல்லப்பட வேண்டும். |
| ix. | 2013 மார்ச் 08 ஆம் திகதிய 04/2013 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஹந்துன்கமுவ, பண்டாரபொல மற்றும் அலுகொல்ல கமநல சேவைகள் செயற்குழுக்களின் கமநல ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களின் 2023 ஆம் ஆண்டில் விற்பனை செய்து கொடுப்பனவு அடிப்படையில் கொடுக்கல் வாங்கல்கங்களுக்கு | முன்னைய ஆண்டுகளில் நிலுவை மீதிகள் காணப்பட்டவை காரணமாக விற்பனை செய்து பணம் கொடுப்பளவு அடிப்படை பொருட்கள் வழங்கப்படவில்லை என்பதாகவும் எதிர்காலத்தில் விற்பனை மேம்படுத்த | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பங்குபற்றி விற்பனை நடவடிக்கைகள் மூலம் கமநல சேவைகள் செயற்குழுவின் வருமான நிலைமையை அதிகரிப்பதற்கு பங்களிப்பு செய்யாதிருந்ததுடன் வாசலகோட்டை, அலுகொல்ல கிபிஸ்ஸ, தேவஹுவ கமநல சேவைகள் நிலைய வளவில் பயன்படுத்தி கமநல உற்பத்தி விற்பனைகள் தற்காலிக சிற்றுண்டிச்சாலைகள் நடத்துதல் மற்றும் கமநல அமைப்பின் விவசாய உற்பத்திகளை கமநல் சேசை நிலையத்தில் விற்பனை செய்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | நடவடிக்கை எடுப்பதாகவும் | |
| x | 2016 பெப்ரவரி 9 ஆம் திகதிய 2016/03 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | கமநல அபிவிருத்தி ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர் ஒருவரால் குறைந்தது 4 மாதங்களுக்கு ஒரு தடவை கமநல அமைப்புகளை பரீட்சித்து கமநல அமைப்பு பரிசோதனை அறிக்கை ஒன்று கமநல அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 16 கமநல சேவைகள் செயற்குழுக்களின் 292 பிரிவுகளுக்குரிய 414 கமநல அமைப்புகள் தொடர்பாக அவ்வாறான அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |
| xi. | 2018 மே 17 திகதிய இலக்கம் 7/5/2/1-2(1) கொண்ட கடிதம் | கிபிஸ்ஸ கமநல சேவைகள் செயற்குழுவினால் 03 சந்தர்ப்பங்களின் போது ரூபா 50,000 இனை மிகைத்து செய்யப்பட்டிருந்த ரூபா 2,310,250 ஆன | சரிசெய்ய நடவடிக்கை எடுத்து அவ்வாறான குறைபாடுகள் இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுப்பதென. | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொடுப்பனவுகளுக்கு கமநல சேவைகள் அபிவிருத்தி பிரதி ஆணையாளரின் இணை ஒப்பம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |
| xii | 2021 ஒக்தோபர் 27 ஆம் திகதிய 16/2021 ஆம் இலக்க கமல அபிவிருத்தி ஆணையாளரின் நாயகத்தின் சுற்றறிக்கை | தம்புள்ள கமநல வங்கியின் மூலம் காலாவதியான கடன் களுக்காக விவசாயி களுக்கு வட்டி சலுகை மேற்கொள்ளப்பட்டிருந்தது சுற்றறிக்கையின் 05 ஆம் கட்டத்தின் பிரகாரம் வட்டி பதிவழிக்கப்பட்டதன் பின்னர் பின்னரும் கடன் பணத்தை செலுத்தாத கடனாளிகளுக்கு உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் வட்டி சலுகை வழங்கப்படும் சந்தர்ப்பங்களின் போது நியாய சபைக்கு தொடர்புபடுத்தபட்ட 38 பேரில் எந்த தவனை பணமும் செலுத்தாமல் இருந்தலுடன் அந்த விவசாயிகளிடமிருந்து ரூபா 1,189,888 ஐ அறவிடுவதற்கு காணப்பட்ட போதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது நியாய சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தாக | சுற்றறிக்கை பிரகாரம் கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| xiii. | 2023 ஏப்ரல் 24 ஆம் திகதிய 01/2023 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி நாயகத்தின் சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தி | ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் அனர்த்த கடன் மேவுகை கணக்கில் சேருகின்ற பணத்தை அனர்த்த நிதிய நிலையான வைப்புக் கணக்கு ஒன்றில் வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் 10 கமநல சேவைகள் செயற்குழுக்களின் கமநல வங்கிகள் மூலம் அவ்வாறு நிலையான வைப்பு தனக்கொன்றில் | 2023 ஆம் ஆண்டு சேகரிக்கப்பட்ட அனர்த்த நிதியத்தை நிலையான வைப்பு கணக்கு ஒன்றில் வைப்புச் செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ள தாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

பணம் வைப்பு செய்யப்படாமை காரணமாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு அனர்த்த நிதிய சேமிப்பு கணக்குகளில் மீதியாக மொத்தம் ரூபா 1,161,846 காணப்பட்டது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மாத்தளை மாவட்டத்தின் 19 கமநல சேவை செயற்குழுக்களின் மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவுகளின் கூட்டுத்தொகை ரூபா 23,298,179 மிகையொன்றானதுடன் 04 செயற்குழுக்களின் செயற்பாட்டு விளைவுகளின் கூட்டுத்தொகை ரூபா 725,470 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த 21 செயற்குழுக்களின் முன்னைய ஆண்டில் ரூபா 15,210,735 மிகையொன்றும் 02 செயற்குழுக்களின் ரூபா. 215,178 ஆன பற்றாக்குறையொன்றாகவும் இருந்தது. மீளாய்வாண்டில் 23 கமநல வங்கிகளின் நிதி விளைவுகளில் ரூபா 13,039,352 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டினக் மிகை ரூபா 5,300,046 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| ஹெட்டிபொல கமநல சேவை செயற்குழுவின் நிறைவேற்று செயலாளரினால் நாளாந்த பெறுவனவு பதிவேடு பரீட்சிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்பட்டதாக கையொப்பமிடப்படாமல் முறையற்ற விதத்தில் காணப்பட்டதுடன் பதிவேட்டிற்குட்படுத்தப்பட்டிருந்த பெறுவனவு கொடுப்பனவின் பிரகாரம் 08 நாட்களில் காசு மீதி மறை மீதியாக இருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் நாளாந்த பதிவேட்டில் உள்ளடக்கப்படாத வருமானம் வங்கியில் இடப்பட்டு இருந்தது. 2014 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 7/2014 (107 திருத்தம் iii) சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தில் 8 நாட்களில் ரூபா 138,768 முதல் ரூபா 1,676,275 வரையான காசு மீதிகள் கையில் வைத்திருக்கப்பட்டிருந்தது.<br>இந்நிலைமை அடிப்படையில் நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 259,616 ஆன கையில் உள்ள காசு மீதியின் சரியான தன்மையை பதிவேடுகளில் பிரகாரம் உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது. | இதுவரை உரிய பதிவேடுகள் சரியாக தயாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பதிவேடுகளை தயாரிக்கும் போது இரண்டு குறிப்புகள் உள்ளதாகவும் தற்போது சரியான மீதி கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் | நிதி கட்டுப்பாட்டுக்குரிய உள்ளக கட்டுப்பாட்டை பலப்படுத்த வேண்டும் எனவும் கையிலுள்ள காசு மீதியின் சரியான தன்மை மேற்பார்வை செய்யப்பட வேண்டும் |

## 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் / இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கோங்கஹவெல கமநல சேவைகள் செயற்குழுவின் மூலம் விவசாயிகளின் தேவைப்பாடு சரியாக இனங் காணப்படாமல் ரூபா 600,000 பெறுமதியான 2000 கிலோ கிராமான சோளம் யூரியா இருப்பு ஒன்று அலுகொல்ல கமநல சேவைகள் செயற்குழுவிற்கு உடன் காசுக்கு மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் அதில் 210 கிலோ கிராம் மாத்திரம் விற்பனை செய்யப்பட்டு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 1790 கிலோ கிராம் இருப்பொன்று எஞ்சி இருந்தது | சோளப் பயிர் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு கொள்வனவு செய்யப்பட்ட போதும் பின்னர் விவசாயிகள் அந்த உரத்தை நிராகரித்தமையால் 1790 கிலோ கிராம் எஞ்சி இருந்ததாக விவசாயிகளின் | தேவைப்பாட்டை சரியாக இனங் கண்டு திட்டமிட்டு கொள்வனவு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | கலேவல கமநல சேவை செயற்குழுவினால் 2023 பெப்ரவரி 28 ஆம் திகதி ரூபா 1,275,000 பெறுமதியான மிளகாய் உரம் மற்றும் மரக்கறி உரம் தனியார் உர கம்பெனியிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டு அவற்றின் சந்தை விலை குறைவடைந்ததன் பேரில் ஏற்பட்ட நட்டத்தை தீர்வு செய்வதற்காக 172,200 ஆன வீட்டுத்தோட்ட பசளை 2023 ஜுலை 06 ஆந் திகதி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது எனினும் தேவைப்பாடு இனம் காணப்படாமல் கொள்வனவு செய்தமைய காரணமாக அந்த வீட்டுத் தோட்ட இருப்பில் எதுவும் விற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை. | இதன் பிறகு அவ்வாறான நிலைமை ஒன்று உருவாகாத வகையில் நடவடிக்கை எடுப்பதுடன் அந்த உரத்தை மீண்டும் திருப்பி அனுப்புவதற்கு அல்லது விலை விபரங்களைக் குறைப்பதற்குரிய கூறிய நிறுவனத்துடன் கலந்து உரையாடப்பட்டு வருவதாக | செயற்குழுவிற்கு ஏற்படும் நட்டத்தைக் குறைக்கக்கூடிய வகையில் இருப்புக் கொள்வனவுகள் மற்றும் விற்பனை நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 07 கமநல சேவை செயற்குழுவிற்கு சொந்தமான காணிகளை கையேற்று மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | கமநல சேவை செயற் குழுவிற்கு சொந்தமான காணிகளை கையேற் பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்வதாக. | உரித்தை கையேற்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கிபிஸ்ஸ கமநல சேவைகள் செயற்குழுவின் 02 ஏக்கருக்கு அண்மித்த அளவிலான காணியைச் சுற்றி ரூபா 500,000 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த உட்பக்க | யானை வேலியொன்று நிர்மாணிக்கப்பட்டு வன விலங்குகளால் காணியை பாதுகாப்பதற்காக 2024 | காட்டு யானைகளின் அச்சுறுத்தலை குறைப்பதற்கு முறையான |

| | | | |
|---|---|---|---|
| | வளை மேவுகையில் மற்றும் கொங்கிரீட் தூண் உடன் முட்கம்பி வேலியில் 04 இடங்களில் மற்றும் நிலையத்தின் கட்டிடங்களுக்கு காட்டு யானைகளால் மீளாய்வாண்டின் சேதங்கள் ஏற்பட்டிருந்த போதும் காட்டு யானை அச்சுறுத்தலில் இருந்து நிலையத்தின் காணி மற்றும் கட்டிடங்களை பாதுகாப்பதற்காக முறையான வேலை திட்டம் ஒன்று செயற்படுத்தி இருக்கவில்லை. | ஜுன் மாதம் செயற்குழுவில் கலந்துரையாடப்பட்ட முன்மொழிவொன்று பிரதி ஆணையாளருக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும் |
| (இ) | 2018 திசெம்பர் 31 ஆம் திகதிய கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 7/5/2/க.அ/கு/கொ ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் நீண்ட காலமாக தீர்வு செய்யப்படாமல் காணப்படும் மீதிகள் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் 19 கமநல சேவைகள் செயற்குழுக்களினால் நிதிக்கூற்றுகளில் 02 ஆண்டுகள் முதல் 30 வரையான காலப்பகுதியில் இருந்து வரும் ரூபா 7,349,177 ஆன 56 பெறவேண்டிய கணக்கு மீதிகள் மற்றும் ரூபா 15,109,700 ஆன செலுத்த வேண்டிய 51 கணக்கு மீதிகள் மீளாய்வாண்டு இறுதி வரையில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் விரைவில் தீர்வு செய்யப்பட வேண்டும் |
| (ஈ) | வாசலக்கோட்டை கமநல சேவைகள் செயற்குழுவிற்குரிய 1994 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 67,100 ஆன நிலுவை கணக்காய்வு கட்டணங்கள் மீதியொன்று மீளாயவாண்டில் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை | நிலுவை கணக்காய்வுக் கட்டண மீதிகளை தீர்வுசெய்ய வேண்டும். |
| (உ) | 2023 மே 16 ஆம் திகதிய கமநல அபிவிருத்தி அணையாளர் நாயகத்தின் 7/7/க.கா.ஆ.கொ/2023 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் வயல் காணிகளை அளவிடும் நடவடிக்கைகள் 2023 மே 31 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 08 கமநல சேவைகள் செயற்குழுக் களுக்குரிய 1438 வயல் காணிகளின் அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்வை. | தற்போது அளவீட்டு நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளப்பட்டு முடியுமான வரையில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | அளவீட்டு நடவடிக்கைகளை விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | நீர்ப்பாசன பதிவேடொன்று பராமரிக்கப்பட்டு அதில் குறிப்பிடப்பட்ட | ஆவணங்கள் நாளதுவரையாக பேணிச் | ஆவணங்களை நாளது வரையாக |

| | | | |
|---|---|---|---|
| | தகவல்களை நாளது வரையாக உள்ளதாக பரீட்சித்து வருடாந்தம் உறுதிப்படுத்த வேண்டும் என கமநல சேவைகள் அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினால் 2008 ஜனவரி 01 ஆம் திகதி ஆலோசனையின் வழங்கப்பட்டிருந்த போதும் 9 கமநல சேவைகள் செயற்குழுக்களின் 307 குளங்கள் மற்றும் அணைக் கட்டுகள் தொடர்பான தகவல்கள் 01 ஆண்டு முதல் 16 ஆண்டுகள் வரையான காலமாக நீர்ப்பாசன பதிவேட்டில் நாலாவதுவரையாக்கப்படாதிருந்ததுடன் 39 அணைக்கட்டுகள் தொடர்பாக எவ்வித தகவலும் அறிக்கை இடப்பட்டு இருக்கவில்லை | செல்லப்படுவதாக | பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | வாசலக்கோட்டை கமநல சேவைகள் செயற்குழுவிற்குரிய அதிகார பிரதேசத்தில் உள்ள 05 அணைக்கட்டுகளை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் மாஉஸ்ஸன ஓய அணைக்கட்டு நீர் இல்லாமல் 10 ஆண்டுகள் அளவிலான காலமாக செயற்பாடு அன்று காணப்பட்டது மேலும் ரத்தொட்ட கமநல சேவைகள் செயற்குழு அதிகார பிரதேசத்தின் 04 பிரிவுகளில் நீர் நெற்செய்கைக்காக பொருத்தமான நிலைமையில் காணப்படும் 28 ஏக்கர் வயல் காணி, அணைக்கட்டு புனரமைப்பு செய்யப்படாமை, வாய்க்காலில் நீர் வடிந்தோடுவது தடைபட்டிருந்தமை மற்றும் தனியார் தரப்பினரால் வயலுக்கு நுழையும் வீதியை தடை செய்தமை அடிப்படையில் 01 ஆண்டு முதல் 25 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் நெற்செய்கைக்கு ஈடுபடுத்தாமல் அல்லது வேறு பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டும் எந்த ஒரு செய்கையும் விளைவற்று காணப்பட்டது. | நிதிஏற்பாடு கிடைத்த பின்னர் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் பழுதடைந்துள்ள அணைக்கட்டுகள் மற்றும் நீர் இல்லாமையால் செயற்பாடற்று காணப்படும் அணைக்கட்டுகளை திருத்தம் செய்து அதன் மூலம் பயிரிடக்கூடிய காணி அளவினை அளவில் பயிரிடுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக | நீர்ப்பாசன மார்க்கங்கள் முறைப்படி பராமரிக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | 05 கமநல சேவைகள் செயற்குழுக்களின் 11 விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களிடமிருந்து விற்பனை செய்து பணம் செலுத்தும் வகையில் பெற்றுக் கொள்ளப்பட்ட பொருட் களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,271,877 தொகை 02 ஆண்டு முதல் 10 வரையானை காலப்பகுதியில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவையை தீர்வு செய்யுமாறு அந்த உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | நிலுவைத் தொகையை விரைவில் அறவிடப்பட வேண்டும் |

**3.4 சர்ச்சைக்குரிய தன்மைலான கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தம்புள்ள கமநல சேவைகள் செயற் குழுவினால் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்படாமல் 2022 ஜூலை முதல் 2023 மார்ச் வரையான காலப்பகுதியில் தனியார் நிறுவனம் ஒன்றிடமிருந்து மொத்தம் ரூபா 9,085,000 ஆன உரங்கள் உடன் காசுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் பின்னர் விலை விலைகள் ஏற்பட்டமை மற்றும் விற்பனை செய்ய முடியாமல் இருந்தமை என்ற அடிப்படையில் கொள்வனவுக் கிரயம் ரூபா 1,286,250 ஆனஇருப்பு மீள திருப்பி அனுப்பப்பட்டு இருந்த போதும் வேறு பொருட்கள் அல்லது பணம் மீள பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முகவராக பெற்றுக்கொள்ளப்பட்டதாகவும் பொதுவாக விலை விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டமையால் ஒன்றுக்கொன்று இணைக்கப்படவில்லை எனவும்இவ்வாறு விலை குறைந்தமை அசாதாரண நிலைமை ஒன்றுக்கு முகம் கொடுத்த நிலைமை ஒன்றாகவும் கமநல சேவைகள் நிலையத்தில் வேலை அளவு அதிகமாக இருத்தல், சந்தை போட்டி அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியவை காரணங்களின் பேரில் தகவல்கள் கோவைப் படுத்தல் மற்றும் ஆவணங்களை தயாரிக்கும் குறைபாடுகள் இடம் பெற்றுள்ளதாகவும் எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் | வெளிப்படையாக பெறுகை நடைமுறை ஒன்று பின்பற்றப்பட வேண்டும் அத்துடன் மீள ஒப்படைப்பதற்கு எழுத்து மூலம் இனக்கப்பாடு ஒன்றுடனான வழங்குனருடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (ஆ) | கலேவல கமநல சேவை செயற்குழுவின் மூலம் முறையான பெறுகை நடைமுறையொன்று பின்பற்றப்படாமல் தனியார் நிறுவனம் ஒன்றிடம் இருந்து முன்னைய ஆண்டின் போது உடன் காசுக்கு 6378 கிலோ கிராம் மரக்கறி உரம் கொள்வனவு செய்யப்பட்டு மீளாய்வாண்டு வரை விற்பனை செய்யப்பட முடியாமல் 6377 கிலோ கிராம் ஆன இருப்பொன்று கொள்விளையான ரூபா 436 விட | விவசாயிகளுக்கான தேவைபாட்டின் பேரில் மாவட்ட விவசாயக் குழுவிற்கு அறிவித்ததன் பேரில் பெறுகை செயற்பாடு ஒன்று இல்லாமல் உரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நேர்ந்ததாகவும் மேலும் 4 சந்தர்ப்பங்களில் பிரதி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டு உரங்கள் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் சிறிது | செயற்குழுவிற்கு ஏற்படும் நட்டத்தை இயலுமானவரை குறைத்துக் கொள்ளக் கூடிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பெறுகை நடைமுறையொன்று பின்பற்றப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | குறைந்த ரூபா 165 இற்கு அதாவது ரூபா 1,728,167 ஆன நட்டமொன்றுடன் விற்பனை செய்யப்பட்டு இருந்தது. இருப்பு விற்பனை செய்யப்படாததன் அடிப்படையில் வேறு உரத்தை பெற்றுக் கொள்வதற்கு இணங்காத அந்த கம்பெனியில் இருந்து பெறுகை நியதிகளுக்கு புறம்பாக மீளாய்வாண்டில் மீண்டும் ரூபா 2,400,000 தொகையான 50 கிலோகிராம் அளவிலான 300 மூடைகள் கொள்வனவு செய்யப்பட்டு இருந்தன. | காலம் அரசின் கொள்கைகள் மற்றும் தீர்மானங்கள் அடிப்படையில் உரங்கள் விலைகள் குறைந்தமை என்பதாக | |
| (இ) | 2019 மார்ச் 15 திகதிய ஹெட்டிபொல செயற்குழுவின் வேண்டுகோளின்றி ரூபா 4,487,532 ஆன 5212 லீற்றர் திரவ பசளை வ/ப லங்கா பசளைகள் கம்பனியினால் செயற்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டு பயன்படுத்தாமை காரணமாக 2020 ஆம் ஆண்டில் காலாவதியாகியிருந்தது. அவ் இருப்பு நிதி நிலைமை கூற்றில் இறுதி இருப்பின் கீழ் மற்றும் செலுத்த வேண்டிய மீதியின் கீழும் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த இருப்பு தொடர்பாக தற்போது பணிகள் இடம்பெற்று வருவதாகவும் வரையறுக்கப்பட்ட லங்கா பசளைகள் கம்பனியினால் அறிவிக்கப்பட்டுள்ளதால் அந்நடவடிக்கைளின் பிரகாரம் இருப்பினை கையளிப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக . | சம்பந்தப்பட்ட கம்பனியை தெரியப்படுத்தி பசளை இருப்பை மீள் ஒப்படைக்க அல்லது பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

**3.5 நிதிய குறை பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| கிபிஸ்ஸ கமநல சேவைகள் செயற்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,396,448 ஆக மற்றும் மீளாவாண்டு முடிவடைந்து 4 மாதங்களில் ரூபா 2,566,386 ஆக சேமிப்பு கணக்கில் காணப்பட்ட மீதி அதிகரித்து காணப்பட்டிருந்த போதும் அப்பணத்தை கூடுதலான வட்டி ஒன்றில் நிலையான வைப்பில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கில் உள்ள காசு மானிய உரக் கடன் தொகையை தீர்வு செய்வதற்கு செலுத்த வேண்டியுள்ளதால் மீண்டும் வருமானத்தை உழைக்கும் வழியொன்றுக்கு ஈடுபடுத்த முடியாது உள்ளதாக | செயற் குழுவின் மூலதன தேவைப்பாட்டை நிறைவேற்றற்கு உட்பட்ட வகையில் குறுங்கால நிலையான வைப்புகளில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.6 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| கிபிஸ்ஸ கமநல சேவை செயற் குழு வளவில் 2012 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட களஞ்சிய கட்டிடம் மீளாய்வாண்டு முடிவடைந்து 05 மாதங்கள் கடக்கும் வரையில் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமை காரணமாக 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் விளைவற்று காணப்பட்டது. அக்கட்டிடத்தின் முன் பக்கமதாக அலுமினியம் மற்றும் கண்ணாடிகளுடனான கதவு ஜன்னல் மற்றும் கூரையின் தகடுகள் இரண்டும் சேதமடைந்து காணப்பட்டன. | தற்போது செயற்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் செயற்குழு நிதியத்தில் இருந்து புனரமைத்து மகாவலி விரிவாக்கல் அலுவலகத்திற்கு அதனைஸ்தாபிப்பதற்கு பிரதி ஆணையாளரின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக | விளைவற்ற சொத்துக்களை பயன்படுத்தப்பட வேண்டும் |

### 3.7 நிதி முறைகேடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஹந்துன்கமுவ கமநல சேவைகள் செயற்குழுவின் நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட ரூபா 171,796 ஆன காசு பற்றாக்குறையை உறுதிப்படுத்து வதற்காக மீளாய்வாண்டு இறுதி வரையில் 5 மாதங்கள் கடந்து இருந்தும் எவ்வித முறையான பரிசோதனை ஒன்றும் மேற் கொள்ளப்பட்டு குறித்த பணத்தை பொறுப்பான உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத இருந்தத்துடன் கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளரின் 2023 மார்ச் 7 ஆம் திகதிய 5/3/5/6 ஆம் இலக்க கையிலுள்ள உள்ள காசு எல்லையை மிகைத்து பிடித்துக் கொள்ளல்'' என்ற கடிதத்தின் அறிவிக்கப்பட்டு இருந்த ரூபா 186,916 ஆன காசு பற்றாக்குறை தொடர்பாக இதுவரை முறையான நடவடிக்கை ஒன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்விடயங்கள் தொடர்பாக ஒழுகாற்று நடவடிக்கை எடுப்பதற்காக ஒழுங்காற்று உத்தியோகத்தரான ஆணையாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் நடவடிக்கைகளை விரைவில் எடுப்பதற்காக செயற்பாடுகளை எடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக | நிதி முறைகேடுகள் தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2015 ஆம் ஆண்டு முதல் எல்கடுவ கமநல வங்கியில் கடமை நிறைவேற்றியதால் ரூபா 743,248 ஆன முறைகேடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தில் 5 ஆம் பிரிவின் கீழ் தவறு ஒன்று மேற்கொண்டு இருக்கையில் தாபன விதிக் கோவையின் XLVIII ஆம அத்தியாயத்தின் 31 ஆவது பிரிவின் பிரகாரம் பொருத்தமான ஒழுங்காற்று நடவடிக்கை ஒன்று எடுக்காமல் வேறு ஒரு கமநல சேவை செயற்குழுவுக்கு இடமாற்றம் ஒன்று மாத்திரம் வழங்கப் பட்டிருந்தது. | இவ்விடயங்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்காக ஒழுங்காற்று உத்தியோகத்தரான ஆணையாளருக்கு அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் நடவடிக்கைகள் விரைவில் எடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | நிதி முறைகேடுகள் தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | கோங்கஹவெல கமநல சேவைகள் செயற்குழுவின் முன்னால் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி அலுவலர் ஒருவர் மேற்கொண்ட நிதி முறைகேடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னர் 2019 ஆண்டு முதல் ரூபா 778,310 தொகையினை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.<br>அவ்வாண்டு முதல் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூபா 345,000 தொகையொன்று அறவிடப்பட்டு இருந்த போதும் எவ்வித காரணத்தையும் குறிப்பிடாமல் ரூபா 433,310 தொகையை அறவிடுவது இடைநிறுத்தப்பட்டு இருந்தது | இது தொடர்பாக ஒழுங்காற்று நடவடிக்கை களை ஆணையாளர் நாயகத்தினால் செயற் படுத்தப்பட்டு வருவதாக | - மேற்படி - |

## 3.8 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 18 கமநல சேவை செயற்குழுக்களுக்குரிய 117 பிரிவுகளில் 117 விவசாய மற்றும் ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் 02 மாதம் முதல் 14 ஆண்டுகள் வரையான காலமாக வெற்றிடமாக நிலவின. | எதிர்காலத்தில் இந்த உத்தியோகத்தர்களை ஆட்சேத்தால் இந்த வெற்றிடங்களை நிரப்ப தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமென்தாக. | வெற்றிடங்களை பூர்த்தி செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களி தன்மையும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| லக்கல கமநல சேவைகள் செயற்குழு மூலம் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டு மதிப்பீடு வருடாந்த நிதி செயலாற்றல் கூற்றில் வருமானம் செலவினம் மற்றும் இலாபத்துடன் ஒப்பிடும்போது முறையே 80 சதவீதம் 126 சதவீதம் மற்றும் 99 சதவீதமான விலகல் காணப்பட்டமையால் பாதீடு முறையான நிதிக் கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | எதிர்காலத்தில் நன்றாக ஆராய்ந்து அதன் பின்னர் வருடாந்த பாதீடு தயாரிக்கப்படுவதாக | சரியாக பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு முறையான நிதிக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட வேண்டும். |

## 5. கமநல வங்கிகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 22 கமநல சேவை செயற் குழுக்களில் கமநல வங்கி நிதிக்கூற்றுக்களுடன் கணக்கீட்டு கொள்கையை வெளிப்படுத்தி இருக்கவில்லை. | திணைக்களத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் கணக்கறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதென. எதிர்காலத்தில் வேறாக கணக்கீட்டு கொள்கையை வெளிப்படுத்த நடவடிக்கை எடுப்பதென. | கணக்கீட்டு கொள்கைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 08 கமநல சேவைகள் செயற்குழுக்கள் மூலம் கமநல வங்கி மென்பொருட்கள் கொள்வனவு செய்தல் மற்றும் அது சேவை கட்டணங்களுக்காக ரூபா 1,294,800 கூட்டுப்பெறுமதி முன்னைய ஆண்டுகளில் செலவிடப்பட்டிருந்த போதும் அம் முறைமையை முழுமையாக பயன்படுத்த முடியாமலும் அனைத்து தரவுகளையும் உள்ளடக்காமை மற்றும் செயற்பாட்டு நிலைமையில் இல்லாமை காரணமாக விளைவற்று காணப்பட்டது. | விரைவில் தரவுகளை உள்ளீடு செய்து பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் எதிர்காலத்தில் திணைக்களத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மென்பொருட்களை பயன்படுத்தி கமநல வங்கியின் நடவடிக்கை களை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | மென்பொருட்களை நோக்கங்களுக்கு உட்படுத்தப்பட்ட செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும் |
| (இ) | 03 கமநல சேவை செயற் குழுக்களினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் நியாய சபைக்கு அனுப்பியிருந்த 54 விவசாயிகளிற்குரிய ரூபா 2,513,996 ஆன கடன் மீதியை | நியாய சபைக்கு அனுப்பப்பட்ட கடன்தாரர்களிற்காக தற்போது அழைப்பித்தல் கிடைக்கப் பெற்றுவருவதென. | கடனை விரைவில் அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடுவதற்காக நியாய சபைக்கு அழைப்பு விடுத்திருக்கவில்லை. | | |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 06 கமநல சேவை செயற்குழுக்களின் நிலவிய 199 பெண்கள் கமநல அமைப்புக்கள் செயலற்ற நிலையில் காணப்பட்டன. | ஒரு கிராமத்துக்கு ஒரு சித்தமு கமநல அமைப்பு வீதம் தாபிக்கப்பட்டு பதிவு செய்வதற்கு 2019 ஆம் ஆண்டின் போது ஆலோசனை வழங்கப் பட்டிருந்த போதும் இதுவரை கிராம சேவையாளர்கள் பிரிவு ஒன்றுக்கு ஒரு சங்கம் வீதம் ஒன்றிணைப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இதுவரை ஒரு பிரிவுக்கு ஒரு மகளிர் விவசாய அமைப்பு வீதம் ஒன்றிணைப்பதற்காக ஏனைய சங்கங்களின் பொதுச்சபையை அழைத்து தீர்மானித்து அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக. | மகளிர் விவசாய அமைப்புகள் தொடர்ச்சியாக நடத்திச் செல்லப்பட வேண்டும் |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 04 கமநல சேவைகள் செயற்குழுக்களில் 51 விவசாயிகளிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,808,835 கூட்டுத்தொகையான செயற்திட்டக் கடன், 02 கமநல சேவைகள் செயற் குழுக்களில் 09 விவசாயிகளிடமிருந்து அறவிட வேண்டிய மொத்தம் ரூபா 415,278 ஆன தொழில் முயற்சிக் கடன், மற்றும் தேவஹுவ கமநல வங்கியால் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,512,073 ஆன மழை மேவுகை கடன் மீதியுமாக மொத்தம் ரூபா 3,736,186 ஆன கடன் மீதிகள் 07 ஆண்டு முதல் 20 வரையான காலம் கடந்திருந்த போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | தற்போது அக்கடன்களை அறவிடுதற்காக நடவடிக்கை எடுக்கப் பட்டும் நியாய சபைக்கு அனுப்பப்பட்டும் உள்ளதாக. | நிலுவை கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு 03 கமநல சேவை செயற்குழுக்களில் நிலவிய 512 சிறுவர் சேமிப்புக் கணக்குகளின் சேமிப்பு மீதிகள் ரூபா 1,000 தொகையை விட குறைவாக காணப்பட்டன. | வழங்கப்படுகின்ற நலன்கள் குறைவடைந்தமையால் வர்த்தக வங்கிகளால் வழங்கப்படும் தொழில் நுட்ப மற்றும் வசதிகள் என்பவற்றை கமநல வங்கிகள் மூலம் வழங்க | சேமிப்புக்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | முடியாமல் இருப்பதால் மீதி குறைவடைந்து உள்ளதாகவும் சிறுவர் சேமிப்பு வைப்புக்களை செயற்பாட்டு மட்டத்தில் பேணிச் செல்வதற்காக முன்பள்ளி பாடசாலை களுடன் தொடர்புபடுத்தி பெற்றோர்களை அறிவூட்டும் வெவ்வேறு நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கு பிரிவுக்கு பொறுப்பானவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக | |
| (எ) | தம்புள்ளை கமநல சேவை செயற் குழுவினால் மக்கள் கம்பனியொன்றிற்கு 2001 ஆம் ஆண்டின் போது ரூபா 1,000,000 ஆன கடன் தொகையை வழங்கியிருந்த போதும் எவ்வித தவணைப் பணத்தையும் அறவிட்டிருக்காததுடன் கடன் தொகையிற்கு மேலதிகமாக மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய வட்டியாக ரூபா 1,743,698 தொகை நிலவியது. | 2015 ஆண்டில் நியாய சபைக்கு தொடர்புபடுத்தி உள்ளதுடன் அந்த வழக்கை தற்போது ஐந்து முறைகள் அழைக்கப் பட்டுள்ளதாகவும் விசாரணை மட்டத்தில் நிலவுவதால் தீர்ப்பு வழங்கப்பட்டில்லையென. | கடன் மற்றும் வட்டிப்பணத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| (ஏ) | கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் நிறுவப்படவுள்ள புதிய வங்கியியல் மென்பொருளையும் அதற்கான உப பாகங்களையும் உபகரணங்களையும் கொள்வனவு செய்வதற்கு மாத்தளை மாவட்ட கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளரின் ஆலோசனையின் பேரில், மீளாய்வாண்டில், 14 கமநல சேவைக் செயற்குழுக்களின் கமநல வங்கிகள் மூலம் ரூபா 4,028,665 தொகையான செலவினமொன்றை மேற்கொண்டு அதில் ரூபா 3,485,460 தொகையை திரண்ட நிதியத்திலிருந்து பதிவழிக்கப்பட்ட போதிலும், மீளாய்வாண்டு முடிவடைந்து 05 மாதங்கள் கடந்தும் மேற்படி உபபாகங்களும் உபகரணங்களும் கிடைக்கப் பெறாதிருந்ததுடன் பண்டாரபொல கமநல சேவைகள் செயற்குழுவின் மூலம் பௌதீக ரீதியாக காணப்படாத ரூபா 543,205 பெறுமதியான அச் சொத்துக்களை நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | 2024 ஜனவரி 23 ஆந் திகதிய 7/12/4 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் இதுவரை கமநல வங்கிகள் திரட்டு நிதியில் இருந்து ,கழிக்கப்பட்டிருந்ததுடன் அச்சொத்துக்கள் கமநல சேவைகள் செயற் குழுவிற்கு கையளிக்கப்பட்தாகவும் கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளரின் அறிவுறுத்தலின் பிரகாரம் ஆணையாளர் நாயகத்தின் கட்டளையின் பிரகாரம் கேள்வி கோரப்பட்டுள்ளதாக. ஆதலால் உரிய கட்டணம் காசோலை மூலம் ஆணையாளர் நாயகத்தின் பேரில் செலவு வைக்கப்பட்டதன் பின்னர் உரிய பாகங்களை வழங்கு வதாக தெரிவித்ததால் | கணக்கு அறிக்கைகளில் தேவையான வெளிப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அந்த ஆலோசணையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக | |
| (ஐ) | மீளாய்வாண்டு இறுதி திகதியில் தேவஹுவ கமநல வங்கியில் ரூபா 894,708 செயற்படாத 58 கடன் மீதிகள் மற்றும் ரூபா 98,016 ஆன கடன் மீதியை உறுதிப்படுத்து வதற்காக கடன் கோவைகளில் தகவல்கள் காணப்படவில்லை. | 2024 மே 31 ஆந் திகதி யில் உள்ளவாறு ரூபா 764,248 ஆன 47 கடன் மீதிகள் காணப்பட்டதுடன் அதில் ரூபா 124,841 ஆன 11 கடன் மீதிகள் தம்புள்ள நீதிமன்றத்திற்கு தொடர்பு படுத்தப்பட்டுள்ளதாகவும் எஞ்சிய 36 கடன் மீதிகள் நியாயசபைக்கு தொடர்பு படுத்தப்பட்டுள்ளதாகவும் தகவல் இல்லாத கடன் மீதிகள் தொடர்பாக 2024 ஆம் ஆண்டில் இனங் கண்டு நடவடிக்கை எடுப்பதாக | கடன் தொகைகள் விரைவில் அறவிடப்பட வேண்டும். |